ter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
NAGAPATTINAM.
S.C.191/17 P.W. 7

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name . திரு. சுப்ரமணியன் | Father & Husband Name. |
| Village. | Taluk. |
| Calling. | Age. |

Date: **10.10.2018**

Thiru N. Manivannan, B.A., B.L., Chief Judicial Magistrate, Nagapattinam Solemnly affirmed in accordance with the provision of Act X, of 1873 day of 10**.10.2018**

முதல் விசாரணை

நான் செம்பகராயநல்லூர் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்துவருகிறேன். எனக்கு அசா.1 அசா.2டை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதவும் தெரியாது. 12.9.2010 அன்று காலை 7.00 மணியளவில் நானும் பாலு என்பவரும் வேதாரண்யம் செல்வதற்காக வந்தோம். அப்பொழுது பன்னீர்செல்வம் வீட்டு அருகே போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். போலிசார் சம்பவஇடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரிவரைபட்ம் தயார் செய்தார்கள். எங்களிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வை மகசார் அதசாஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் தனியார் பேருந்து நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருத்துறைப்பூண்டி வேதாரண்யம் வழித்தடத்தில் பேருந்து ஓட்டி வருகிறேன். கரியாப்பட்டினம் காவல் நிலையம் அந்த வழித்தடத்தில்தான் உள்ளது. நான் பணிபுரியும் நிறுவனத்தில் 10, 15 பேருந்துகள் உள்ளன. அந்த நிறுவன பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் சென்று வருகின்றது. அந்த நிறுவனத்தின் பேருந்துகள் பெரும்பாலானவை தித்துறைப்பூண்டி வேதாரண்யம் வழித்தடத்தில் ஓட்டப்பட்டு வருகிறது. அந்த வழித்தடத்தில் எங்கள் பேருந்தில் சில விபத்துகளும் நடந்துள்ளது. அது சம்மந்தமாக கரியாப்பட்டினம் காவல் நிலையத்திற்கு சென்றுவருவது வழக்கம். எங்கள் பேருந்து நிறுவன உரிமையாளர் நம்பிக்கையின்பேரில் காவல் நிலைய பணிகளுக்கு என்னை அனுப்புவார். நான் காவல் நிலையத்திற்கு அடிக்கடி சென்றுவரும் நிலையில் எனக்கும் காவல் நிலையத்திற்கும் நல்ல பழக்க வழக்கம் உள்ளதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் சொல்லும் இடத்தில் கையெழுத்து போடுவேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்திட்ட பேப்பரில்

எழுதப்பட்டுள்ள விபரங்கள் தெரியும் படித்துப்பார்த்தேன். போலிசாருக்கு நான் மிகவும் வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மகசரில் உள்ள கையெழுத்து நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. நான் எழுதப்படாத பேப்பரில் கையெழுத்துப்போட்டேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.